# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (பெண்கள்)

## சாத்தான்குளம்

## II. பி.ஏ. தமிழ்

## நுகர்வோர் வழிப்புணர்வு

**முனைவர் : ரா. மெர்ஸி பவுன் மலர்**

**உதவிப் பேராசிரியர்**

**வணிகவியல் துறை**

---

**நுகர்வோர் என்பவர் யார்?**

பொருட்களையோ அல்லலு சேவைகளையோ

- வாக்குறுதி கொடுத்தோ
- விலை கொடுத்தோ
- ஒரு பாதி பணம் செலுத்தி மறுபாதி

வாக்குறுதி கொடுத்தோ பொருட்களை வாங்கி, பயன்படுத்துபவரையும் சேவைகளை அனுபவிப்பவரையும் நுகர்வோர் என்கிறோம்.

எனவே, நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ பணம் கொடுத்து பொருட்களை வாங்குபவர்களாகவும் சேவைகளை அனுபவிப்பவர்களாகவும் உள்ள நாம் அனைவரும் நுகர்வோரே.

**<u>எடுத்துக்காட்டு:-</u>**

- ஒரு கடைக்கு சென்று ஒரு மொபைலை பணம் கொடுத்து வாங்கினால் நாம் நுகர்வோர்.

- ❖ பணம் கட்டி தொலைப்பேசி சேவையை பெறுபவர் நுகர்வோர் ஆவார்.
- ❖ தவணை முறையில் பாதி பணம் செலுத்தி பொருட்களை வாங்கினால் நாம் நுகர்வோர்.

- ❖ ஒரு ரூபாய் பணம் கொடுத்து நாம் பொருளை வாங்கினாலும் நாம் நுகர்வோரே

வணிக மற்றும் வியாபார நோக்குடன் ஒரு பொருளினை அல்லது சேவையினை பணம் செலுத்தி பெறுபவர் / விலை கொடுத்து அதாவது மறுவிற்பனைக்காக வாங்குபவர் / இலாப நோக்குடன் வாங்குபவர் / சில்லறை வியாபாரி / நுகர்வோர் அல்ல. ஆனால் சிறு வியாபாரத்தை மட்டுமே நம்பி பொருட்களை வாங்கி விற்று பிழைப்பை நடத்துபவர்கள் நுகர்வோர் ஆகிறார்.

**<u>எடுத்துக்காட்டு:</u>**

- ❖ ஒரு துணிக்கடை முதலாளி மொத்த வியாபாரியிடம் இருந்து துணிகள் வாங்கி, அதில் ஏதேனும் பழுதடைந்தால் அவர் நுகர்வோர் மன்றத்தை அணுக முடியாது. ஏனெனில் அவர் லாப நோக்கத்திற்கு பொருளை விற்பனை செய்பவர் ஆவார்.
- ❖ இலவசமாக மருத்துவ உதவி பெறும் ஒருவர் அதில் பிரட்சனை ஏற்பட்டால் நுகர்வோர் என்ற முறையில் தீர்வு காண இயலாது. ஏனெனில் அவர் பணம் செலுத்தி சேவை பெறவில்லை.
- ❖ தரம் குறைந்த விதை விற்பனை. இதனால் சத்து குறைவான உணவும், குறைந்த அளவு மகசூல். அதனை உடல் பாதிப்பு.

- ISI முத்திரை இல்லாத மின்சானப் பொருட்கள் விற்பனை - இஸ்திரி பெட்டி, மிக்ஸி

**தகவல் பெறும் உரிமை :**

போலியான விளம்பரங்கள் மற்றும் ஏமாற்று வித்தைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும். சரியான, வகையில் சரியான சேவை, பொருட்களை வாங்க தகவல் பெரும் உரிமை தேவைப்படுகிறது.

**வணிகர்கள் நுகர்வோரை ஏமாற்ற முற்படும் வழிகள் சில :**

- போதுமான தகவல்கள் அளிக்காமல், பொருட்களோ, சேவைகளையோ வாங்க தூண்டுதல்.
- பொருட்களின் தரம், விலை, எண்ணிக்கை, தூய்மை நிலை பற்றி போதிய தகவல் அளிக்காது இருத்தல்.
- பொருட்களில் உள்ள தீய விளைவைப்பற்றி கூறாதிருத்தல்.
- பொட்டங்களில் உள்ள உணவு பொருட்களில் சேர்க்கப்பட்ட பொருட்களை

  - கூறாதிருத்தல்.

**நுகர்வோர் உரிமைகள் யாவை?**

தாமதமான சேவையொ, தரமற்ற பொருளையோ வாங்கும் போது அதை பற்றி புகார் மற்றும் அதை பற்றி தெரிந்துக் கொள்ள நமக்கு உரிமைகள் உள்ளன.

**பாதுகாப்பு உரிமை :**

உடலுக்கும் உயிருக்கும் ஆபத்து விளைவிக்கக் கூடிய பொருட்கள், உற்பத்தி செய்யும் முறை மற்றும் சேவைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமை

- ❖ உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் தரமோ, செய்முறைகளோ அல்லது சேவைகளோ நுகர்வோர்க்கு பாதிப்பை ஏற்படுத்தாமல் இருப்பது அவசியம்.
- ❖ உணவு கலப்படம் : தேயிலையில் மரத்தூள் கலப்பது சர்க்கரையில் ரவை கலப்பது.
- ❖ காலாவதியான மருந்து விற்பனை.
- ❖ தரமற்ற மோட்டார் வாகன உதிரி பாகங்கள் விற்பனை - பிரேக் ஒயர், டயர்

**தேர்ந்தெடுக்கும் உரிமை :**

தனக்கு தேவையான சேவைகளை அல்லது பொருட்களை தேர்ந்தெடுக்கும் உரிமை

வணிக சந்தையில் ஆரோக்கியமான போட்டி இல்லாத போது நுகர்வோர் கிடைக்கும். பொருட்களை வாங்குகின்றனர். அப்பொழுது, தனக்கு தோன்றிய விலையை நிர்ணயிக்கிறார்கள்.

போலியான தட்டுபாட்டை ஏற்படுத்தி பொருட்களை விலையை உயர்த்த முயற்சித்தல்.

பொருட்கள் கொடுப்பதை தன் நிபந்தனைகளுக்கு ஏற்ப கையாளுகிறார்கள்.

இவற்றால் சந்தைகளில் பொருட்களின் விநியோகம் பாதிக்கப்படுகிறது.

வியாபார தந்திரத்தை பயன்படுத்தி நுகர்வோரை ஒரு பொருளை வாங்குமாறு கட்டாயப்படுத்தி தவறானது.

பலதரப்பட்ட டி.வி. குளிர்சாதனப் பெட்டி போன்றவற்றிலிருந்து தமக்கு தேவையானவற்றை தேர்ந்தெடுக்கும் உரிமை உள்ளது.

**பிரதிநிதித்துவ உரிமை :**

- ❖ பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை நிர்ணயிக்கும் பொழுதும், அரசு கொள்கைகளை உருவாக்கி செயல்படுத்தப்படும் போது நுகர்வோர் கருத்துக்களை எடுத்துக்கூறும் உரிமை.
- ❖ தன்னுடைய கருத்துக்களை குறைகளையும், எடுத்துக் கூற, அணுக தேவைப்படும் உரிமை பிரதிநிதித்துவ உரிமை.

**எடுத்துக்காட்டு**

- ❖ நுகர்வோரின் நலனுக்காக ஒவ்வொருவரும் தன் கருத்தைக் கூறும் உரிமை.
- ❖ பிரதிநிதித்துவ உரிமையை நிலைநாட்ட நுகர்வோர் இணைந்து செயல்படுவது நல்ல பயனை தரும்.

- ❖ நுகர்வோர் அமைப்புகள் பொதுநலம் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு குரல் கொடுக்க வேண்டும்.

**குறைதீர்க்கும் உரிமை :**

தரமற்ற பொருட்கள், திருப்தியற்ற சேவைகள் காரணமாக ஏற்படும் இழப்பிற்கு நியாயமான நஷ்ட ஈடு பெறும் உரிமை.

குறை தீர்க்கும் உரிமை என்பது ஒரு பொருளையோ சேவையையோ விலை கொடுத்து வாங்கி, அதில் நியாயமான குறைபாடு இருப்பின் அதற்கு நஷ்ட ஈடு பெறும் உரிமை.

- ❖ இவ்வுரிமை, நுகர்வோருக்கு தரமற்ற வணிக முறையில் இருந்து பாதுகாத்து ஒரு தீர்வு காணும் உரிமை.
- ❖ வாங்கிய பொருளியோ, சேவைகளிலோ குறைபாடு இருப்பின், அதற்கு ஏற்ற நட்ட ஈடு பெறும் உரிமை.
- ❖ இதற்காக நாடு முழுவதும் நுகர்வோர் குறைதீர் மன்றங்களை அமைத்து மக்களுக்கு பயன் அளித்து வருகிறது.

**நுகர்வோர் கல்விக்கான உரிமை :**

விழிப்படைந்த நுகர்வோராக இருப்பதற்கு தேவையான அறிவையும், திறமையும் பெறும் உரிமை.

- ❖ பள்ளிகளில் நுகர்வோர் மன்றங்கள் அமைத்தல்.
- ❖ பெண்களுக்கான சுய உதவிக் குழுக்களுக்கு நுகர்வோர் கல்வி பயிற்றுவிக்கும் முயற்சியில் ஈடுபடுதல்.

- ❖ நுகர்வோர் நலனுக்காக "நுகர்வோர் கவசம்" என்ற காலாண்டு இதழை வெளியிடுதல்.
- ❖ தமிழக அரசிற்கு உறுதுணையாக பல தன்னார்வ அமைப்புகள் தங்கள் ஆதரவை அளித்து வருகிறது.

**தூய்மையான நலம் பயக்கும் சுற்றுசூழலுக்கான உரிமை**

இன்றைய மற்றும் வருங்கால தலைமுறையினரின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் தூய்மையான நலம்பயக்கும் சுற்றுசூழலுக்கான உரிமை.

- ❖ தொழில் நுட்ப வளர்ச்சியாலும், உற்பத்தி அதிகரிப்பினாலும் சுற்றுசூழல் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.
- ❖ இதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள இவ்வுரிமை தேவைப்படுகிறது.
- ❖ நுகர்வோராகிய நாம் சுற்றுசூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய பொருட்களை வாங்குவதையும், பயன்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும்.
- ❖ விழிப்புணர்வுடனும், சுற்றுசூழல் நண்பனாக இருக்க வேண்டும்.

**அடிப்படை தேவைக்கான உரிமை :**

- ❖ உணவு, உடை,இருப்பிடம், கழிவு நீக்கம், உடல் நல பாதுகாப்பு ஆகியவை முக்கிய அடிப்படை தேவை.
- ❖ இவற்றை எளிதில் அணுகக்கூடிய உரிமை இந்த அடிப்படை தேவைக்கான உரிமை.
- ❖ இது நுகர்வோருக்கு அவர்களது நல்வாழ்விற்கு அடிப்படை வசதிகள் கிடைக்க உறுதி செய்கிறது.

**நுகர்வோரின் கடமைகள் யாவை?**

நுகர்வோர் தனக்கு தீங்கு ஏற்படும் வேலையில் அதை சரி செய்ய உரிமைகள் இருப்பது போல சில கடமைகளும் உள்ளன. ஒரு சிறந்த நுகர்வோர் பொறுப்பு மிக்க குடிமகனாக இருக்க வேண்டும்.

**எச்சரிக்கையாக இருத்தல் மற்றும் நிறைய கேள்வி கேட்கும் உரிமை :**

- கடைகளில் பொருட்களை வாங்கும்போது பட்டியல் விலை, தரம், காலாவதி தேதி ஆகியவற்றை கவனித்தல்.
- விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் முன் இதை முன் வாங்கிய உறவினர், நண்பரிடம் விசாரிக்க வேண்டும்.

**ஈடுபாட்டுடன் இருத்தல் :**

நுகர்வோர் என்ற வகையில் நீங்கள் உங்களது எண்ணத்தை தெரிவிக்காமல் இருந்தால் நீங்கள் ஏமாற்றப்படுவீர்கள்.

**சுற்று சூழல் குறித்து பொறுப்புணர்ச்சி :**

- நாம் உபயோகப்படுத்தும் பொருள் சுற்று சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது.
- பிளாஸ்டிக் பொருட்களை வாங்குவதை தவிர்த்தல் அல்லது மறுசுழற்சியாளரிடம் ஒப்படைத்தல்.
- மக்கக்கூடிய பொருட்களை உரமாக்கிப் பயன்படுத்துதல்.

**கூட்டு முயற்சி :**

அனைத்து நுகர்வோரும் இணைந்து ஒன்றாக குரல் கொடுக்க வேண்டும்.

- ❖ நுகர்வோர் நலனை பாதுகாக்க கூட்டாக இணைந்து போராட வேண்டும்.
- ❖ பள்ளிகளில் நுகர்வோர் சங்கம் ஏற்படுத்துதல்.

**தேவைக்கு அதிகமான நுகர்வை தவிர்த்தல்**

- ❖ ஒவ்வொரு நுகர்வோரும் தனக்கு தேவையானதை மட்டுமே வாங்கவேண்டும்.
- ❖ ஆடம்பர மற்றும் அதிகமான பொருட்களையோ, சேவைகளையோ பெறக்கூடாது.
- ❖ இது வீட்டிற்கும், நாட்டிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.
- ❖ மேலும் நம்மைவிட ஏழை நுகர்வோரை பெரிதும் பாதிக்கும் என்ற எண்ணத்துடன் செயல்பட வேண்டும்.

**எடுத்துக்காட்டு :**

- ❖ வீட்டில் தேவைக்கு அதிகமாக விளக்குகளை எரிய வைத்து மின்சாரத்தை வீணாக்குதலை தவிர்த்தல்.
- ❖ திருமணம் மற்றும் திருவிழாக்களை தேவைக்கு அதிகமான உணவை தவிர்த்து வீணாக்குதலை தவிர்த்தல்.
- ❖ தேவைக்கு அதிகமான ஆடையை வாங்கி வீணாவதை தவிர்த்தல்.

**தவறு செய்யும் உற்பத்தியாளர்கள் - வணிகர்கள் பற்றி புகார் செய்தல் :**

- தவறுகள் முறைகேடுகளில் ஈடுபடும் வணிகர்கள் / உற்பத்தியாளர்கள் / நிறுவனங்கள் மீது புகார் அளிக்க வேண்டும்.
- இல்லையென்றால் தவறு தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும்.
- நமதுக்கு பின் பிற நுகர்வோரையும் ஏமாற்றுதல்.
- எனவே ஒவ்வொரு நுகர்வோரும் தவறு செய்யும் வணிகர்கள் / உற்பத்தியாளர்கள் / நிறுவனங்கள் மீது புகார் அளித்து தவறுகளை திருத்த முயலவேண்டும்.

**பொருட்களையோ, சேவைகளையோ முறையாக பயன்படுத்துதல் :**

- விலை கொடுத்து வாங்கும் பொருட்களையும், சேவைகளையும் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு பயன்படுத்த வேண்டும்.
- நுகர்வோர்கள் தவறுகள் செய்தால் மற்ற நுகர்வோர்கள் பாதிக்கப்படுவார்கள்.

**முறைகேடான செயல்களில் சில**

- நகராட்சி குடிநீர் குழாய்களில் திருட்டுத்தனமாக மோட்டார்கள் பயன்படுத்தி கூடுதலான நீரை பயன்படுத்துதல்.
- மின்சார கம்பிகளில் கொக்கியிட்டு திருட்டுத்தனமாக மின்சாரத்தை பயன்படுத்துதல் அல்லது மின் மோட்டாரில் முறைகேடு செய்தல்.